06 DEC 1998


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு2029கார்த்திகை20ஞாயிற்றுக்கிழமை(06-12-1998)UTHAYAN-ALively National Tamil Daily கதிர்: 8


# புதுக்குடியிருப்பு, முள்ளியவளையில் ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சம்!

## அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி முகாம்களில் தங்கி உள்ளனர்

வவுனியா, டிசெம்பர் 6

**கடந்த வியாழக்கிழமை "சூரிய சக்தி" நடவடிக்கை மூலம் படையினர் ஒட்டுசுட்டானைக் கைப்பற்றிய சமயம் அங்கிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தற்பொழுது புதுக்குடியிருப்பு, முள்ளியவளைப் பகுதிகளில் உள்ள கோயில்களிலும், பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.**

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியில் இருந்து அப்பகுதிகளில் கடும் மழை பெய்து கொண்டிருப்பதால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும்—

பலர் சாய்ச்சலினாலும் வாந்திபேதியினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் — இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்பொழுது புதுக்குடியிருப்பிலும் முள்ளியவளையிலும் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பில் உள்ள பத்து பாடசாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் அகதிகள் இந்த முகாம்களில் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் முத்தையன் கட்டு, கற்சிலைமடு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் —

நேற்று முன்தினம் முல்லைத்தீவுப் பகுதியில் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-7-9]

## 350 பேரைக் காணவில்லை என செஞ்சிலுவைக் குழுவிடம் முறையீடு

வவுனியா, டிசெ. 6

படையினர் கைப்பற்றியுள்ள ஒட்டுசுட்டான் பகுதியில் 350 பேரைக் காணவில்லை என அவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒட்டுசுட்டான் பகுதியில் காலையில் வயல் வேலைகளுக்கும், பால் கொடுப்பதற்கும் என சென்றவர்களே அதிக அளவில் காணாமற் போயுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9-164)

## பிரபாவின் மாவீரர்தின உரை குறித்து அரசாங்க உயர் மட்டம் ஆராயும்

கொழும்பு, டிசெ. 6

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர்தின உரையின் போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தெரிவித்த கருத்துக்கள் பற்றி அரச உயர் மட்டம் ஆராயும்என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அடுத்த சில தினங்களில் அரசாங்கம் முடிவு எடுக்கும் என்று பிரஸ்தாப அமைச்சர் தெரிவித்ததாக அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இயல்பான சூழ் நிலையில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்த உதவியுடன் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் தெரிவித்தது தெரிந்ததே.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ் நிலையை உருவாக்குவது தொடர்பான

(10ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி வலய கட்டமைப்பை உடன் அமுல்செய்ய பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6

புதிய கல்வி வலயக் கட்டமைப்பு யாழ். மாவட்டத்தில் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். வலய நிர்வாகக்துக்குள்இருக்கும் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களுடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்வி நிர்வாகமும் யாழ். வலய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் புதிய கட்டமைப்பை அமுல்படுத்துவதற்காக யாழ். கல்வி வலய பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை ஊர்காவற்றுறை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளின் நிர்வாகம் தீவக வலயத்தின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானை இழந்தது பற்றி புலிகளும் அறிவிப்பு

வவுனியா, டிசெ. 6

ஒட்டுசுட்டான் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ''சூரிய சக்தி'' இராணுவ நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் பகுதி படையினரால் கைப்பற்றப்பட்டுளளது எனவும்—

படையினர் கைப்பற்றியுள்ள பகுதிக்குள் 600 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அகப்பட்டுள்ளனர் எனவும்—

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் என வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-9-7)

## மட்டக்களப்பு சம்பவம் குறித்து புளொட் அறிக்கை

கொழும்பு, டிசெ. 6

மட்டக்களப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் அல்லவா?

இந்த சம்பவம் தொடர்பாக புளொட் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் செங்கலடியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலைகளுக்கும் புளொட் அமைப்புக்கும் தொடர்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொலைச் சந்தேகநபரான பாலா என அழைக்கப்படும் சோமலிங்கம் பாலசுப்பிரமணியம் முன்னாள் புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு புலிகள் அழைத்துச் சென்றனர்

மட்டக்களப்பு, டிசெ. 6

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி, மணிபுரம் கிராமத்தில் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டுவந்த நபர் விடுதலைப் புலிகளினால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் உள்ள தளவாய் என்ற இடத்தில் தனது மனைவியுடனும், மகனுடனும் இவர் தங்கி இருந்த சமயம் விடுதலைப் புலிகள் இவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தேடுதல்

வவுனியா, டிசெ. 6

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் நகர்ப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் அனைத்தும் நேற்று இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது ஒட்டோவில் வந்த சிலர் கிரனேட் தாக்குதலைநடத்தியிருந்தனர். அவர்களையும் அந்த ஒட்டோவையும் தேடியே இந்தச் சுற்றி வளைப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-164)

## இந்திய அமைச்சரவையில் 3 புதிய அமைச்சர்கள்

சென்னை. டிசெ. 6

இந்திய மத்திய அமைச்சரவையில் நேற்று மூவர் புதிய அமைச்சர்களாகப் பதவி ஏற்றனர்.

வெளியுறவுத்துறை அமைச்சராக யஸ்வர் சிங்கும், தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக யக்மோகனும், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக பிரமோட் மகோஜனும் புதிய அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் முன்னிலையில் இவர்களின் பதவி ஏற்பு வைபவம் நடத்தது.

துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந், பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய் ஆகியோரும் நேற்றைய பதவிஏற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய பதவிஏற்புடன் இந்திய மத்திய அமைச்சர்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்தது. (இ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இராசதுரை

(காரைநகர் மாப்பாணவூரி)

(ஒட்டுசுட்டான் ராஜா ஸ்ரோர்ஸ்)

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசதுரை 04, 12. 98 இல் ஒட்டுசுட்டானில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவஞானத்தின் அன்புக்கணவருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவலிங்கம்
(மைத்துனர்)

90 சம்பியன் லேன்,
கொக்குவில்.

(61126)

## திருமதி கமலாம்பிகை இராசரத்தினம்

தலையாழி, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை இராசரத்தினம் 04. 12. 98 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. ச. இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், தி. அமரசிங்கத்தின் அன்புச் சகோதரியும், ராதாகிருஷ்ணன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரமலர், ஜானகிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாயிசங்கர், சாயீஸ்வரி, சாயிஜனனி, சாயிபிரபா, சாயிநிரஞ்சன், சாயிமாதவன், சாயிமுகுந்தன், சுதாகர், துஷாந்தி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-12-98) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிஅளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
R. பாலகிருஷ்ணன்

41/4, Canal Bank Road,
Kalubowila,
Dehiwala.
T. P. 727129

(61139)

## திருமதி அமிர்தம் துரையப்பா

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி அமிர்தம்துரையப்பா 05. 12. 98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய சிறாப்பர் வேலுப்பிள்ளை துரையப்பாவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற திருமதி ஞானாம்பாள் குமாரபாரதியின் அன்புத்தாயாரும், ஞானபாரதியின் (நியூசிலாந்து) அன்புப்பேர்த்தியும், திருமதி தங்கம்மா, கணபதிப்பிள்ளை (இந்தியா), காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி (அன்னம்), அம்பலவாணர், அப்பையா, கனகரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 6-12-98 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்கா கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பரமகுருநாதன்
(பேறாமகன்)

21/3 சிவப்பிரகாசம் வீதி,
ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை.

(61143)

## குணரட்ணம் ஜீவானந்த்

குணரட்ணம் ஜீவானந்த் 04—12—98 அன்று ஜேர்மனியில் அகால மரணமானார்.

இவர் ஜேர்மனியில் வசிக்கும் குணரட்ணம்–மாலதி தம்பதிகளின் அருமை மகனும், ஜீவிதாவின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பத்மநாதன்
(பேரன்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(61130)

## இரத்தினராசா தனபாக்கியம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது பண்ணாகத்தில் வசித்தவருமாகிய இரத்தினராசா தனபாக்கியம் 4-12-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினராசாவின் அன்பு மனைவியும் செல்வராசா (பிரான்ஸ்), பாலபாஸ்கரன் (சுவிஸ்), மகாதேவன் (சுவிஸ்), வாமதேவன் (சுவிஸ்), மருதவாணர் லீலாவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-12-98அன்று திருவடிநிலை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஆ. தெட்சணாமூர்த்தி (C.T.B)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(61124)

## விவசாய பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி, டிசெ. 6

கமநல சேவைகள் திணைக்களத்தினால் 'சீடா' உதவித் திட்டத்தின் கீழ் பளைப் பிரதேச விவசாய சம்மேளனங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான விவசாய பயிற்சிப்பட்டறை நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பளை கமநல கேந்திர நிலையத்தில் நடைபெறும் என பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ–117)


SHAMROCK
யா/ஈச்சமோட்டை வீதி
Yr. 6, 7, 8, 9, 10, 11
புலமைப்பரிசில்- Yr. 5
ஆரம்பம்: 12-12-98
Sat- 8 A.m.
★ ஒவ்வொரு வகுப்புக்கும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
[சி/5823]

றீகல்
டாக்கீஸ்
ஈச்சமோட்டை
பிரபு, தேவயானி
நடித்த
என் உயிர் நீதானே
10. 30 மணிக்கு
M. G. R. நடித்த
தனிப்பிறவி
2.30 மணிக்கு
[நேரடி CD[
(61145)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
இன்று முதல்
30 அடி அகலத் திரையில்
சரத்குமார், குஷ்பு
நடித்த
சிம்மராசி
(புதிய வெளியீடு)
காட்சிகள் - 10.30-2.30
11 ஆம் திகதி முதல்
மீண்டும் கூட்டுத்தாபன
ரீல்ஸ் வெளியீடு
குதூகல ஆரம்பம்
காதல் கோட்டை
(61122)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி.
விஜயகாந் (இருவேடம்),
குஷ்பு, ரோஜா,
மனோரமா, செந்தில்
நடித்த
வீரம்
வெளைஞ்ச மண்ணு
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி:
070 - 212223
(61071)

ராஜா
டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, ரோஜா
ஜனகரராஜ், செந்தில்
நடித்த
வீரா
தினசரி
10-30, 2-00, [illegible]
(சி/5711)


## மின் இணைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.6

தெல்லிப்பழை சித்தியம் புளியடி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் அங்கு வந்து குடியேறியுள்ள 463 குடும்பங்கள் தமக்கு 24 மணிநேர மின் இணைப்பு வசதி பெற்றுத்தருமாறு வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி. டி.பி யின் வட்டுக்கோட்டைப் பகுதி அமைப்பாளருமான என்.திரிலோகநாதனைக் கோரியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், தமது கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தாவுடனும் இது குறித்து தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக திரிலோகநாதன் உறுதியளித்துள்ளார்.

(உ)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் வேலாயுதபிள்ளை

(நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்த பொன்னர் வேலாயுதபிள்ளை அவர்கள் 05-12-98 இல் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னர் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற திருமதி சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி சின்னம்மா, இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பலீலாவதி, சாருகாசினி (உபஅதிபர், விபுலானந்த மகாவித்தியாலயம் - வவுனியா), ஈஸ்வரி (மருத்துவ மாது, முள்ளியவளை), வேதாரோகினி, நவநிதி (பிரதம லிகிதர், தொழில் திணைக்களம் - வவுனியா), ஞானோதரன் (பதில் முகாமையாளர் – இலங்கை வங்கி, வவுனியா), ஞானவரோதயன் (பிரான்ஸ்), ஞானகாந்தன் (அதிபர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம் (C.T.B., கோண்டாவில்.), சீனிவாசகம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வவுனியா), மஹேஸ்வரன் (C.T.B., முல்லைத்தீவு), கலைநாதன் (வர்த்தகர், கொழும்பு.), சிவபாலன் (இலங்கை வங்கி பதில் முகாமையாளர், வவுனியா), நாகரஞ்சினி, கலைச்செல்வி (பிரான்ஸ்) கேதாரபூரணி (ஆசிரியை, ஞானக்குழந்தை இல்லம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-12-98) ஞாயிறு வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. ஞானகாந்தன்
(மகன்)

110/5, இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(61146)

## திருமதி மரகதவல்லி கணபதிப்பிள்ளை

(நடுவில்பிள்ளை)

திருமதி மரகதவல்லி கணபதிப்பிள்ளை 5-12-98 நேற்று உடுப்பிட்டியில் காலமானார்.

இவர் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், சமாதான நீதிவானுமாகிய கலஞ்சென்ற பொ. கணபதிப்பிள்ளையின் (நடுவில்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை (நியாயதுரந்தர், சமாதான நீதிவான், பிரசித்த நொத்தாரிசு) வன்னிச்சி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தா. இராமலிங்கம் (நியாயவாதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பருத்தித்துறை), தா. சிவகுருநாதன் (முன்னாள் ஆசிரியர், உடுப்பிட்டி கிராமசபைத்தலைவர்), தா. சுப்பிரமணியம் (கூட்டுறவுப் பரிசோதகர்), தா. சேனாதிராசா (பிரதம காணி விலை மதிப்பீட்டாளர்), தா. மயில்வாகனம் (காணி விலை மதிப்பு பரிசோதகர்) மற்றும் திருமதி பாலாம்பிகை மகேஸ்வரன், திருமதி புவனேஸ்வரி சங்கரகுமாரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும். க. மகாதேவா (பிரசித்த நொத்தாரிசு, நிறைவேற்றுனர்- ஹேலிஸ் கொம்பனி), திருமதி மா. கமலாதேவி (விரிவுரையாளர்-சாம்பியா), க. மகேந்திரன் (கணக்காய்வாளர் நிறுவனம் M.L.S கொழும்பு), காலஞ்சென்ற திருமதி சறோ ஞானபண்டிதன் (சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்), திருமதி கே. கௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் எஸ். மாணிக்கவாசகர் (கணக்காளர் சாம்பியா), வைத்திய கலாநிதி க. கேதீஸ்வரநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி ம. திருவேணி, திருமதி ம. சாரதா ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி, சஞ்சீவ் (பொறியியலாளர் சிங்கப்பூர்), பிரதீப் (பல்கலைக்கழகம் லண்டன்), சாளினி (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), துவாரகன், லக்ஸ்சனா, தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-12-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
Dr. க. கேதீஸ்வரநாதன்
(மருமகன்)
(யாழ். போதனா வைத்தியசாலை)

இமையாணன்,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

(61141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சூரியகாந்தி

**உதயன்** ஞாயிறு சிறப்பம்சம்

## பழைய தத்துவங்களை உள்வாங்கி புதிய வழிவகைகளைக் கைக்கொள்க

தமிழும் சைவமும்வளர உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை எதிர்வரும் புதன்கிழமையாகும். அவரைநினைத்தபோது அன்னை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு எழுந்த சிந்தனை இது. வாசகர்கள் மனதூன்றிப் படிக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.

திருவருளால் வாழ்வும் வளமும் பெற்றநாடு எமது யாழ்ப்பாணம். சிவநெறியைப் போற்றியும் சைவ அனுட்டானங்களைப் பேணியும் வாழ்பவர்கள் இந் நாட்டுச் சைவமக்கள்.

உலகில் வேறு எங்கும்

## அகவாழ்வு பண்படுவது அவசியம்

காணமுடியாத கட்டுப்பாடும் ஒழுங்கும் ஆசாரமும் யாழ்ப்பாணச் சைவமக்களிடையே சிறப்பாகக் காணப்படுகிறது. திருக்கோயில்களை நன்முறையில் பேணியும் சைவ சித்தாந்த மரபைப் பாதுகாத்தும் வந்தவர்கள் இவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களே இவற்றுக்குத் தூய்மையான வழியைக் காட்டிச் சென்றார் என்று கூறுவது மிகவும் பொருத்தமானது.

நாவலர் பிறந்த நாடு நம் நாடு என்று கூறுவதிலேயே யாழ்ப்பாணச் சைவ மக்கள் பெருமிதம் அடைகிறார்கள். ஒரு நாடு வாழ வேண்டுமானால் சமய நெறி நிற்போர் எண்ணிக்கை பெருக வேண்டும் என்ற நம்பிக்கை சமயத் தலைவர்கள் அனைவருக்கும் என்றுமே உண்டு.

முற்கால மன்னர் பெருமக்கள் சிவநெறி நின்று அறநெறி பேணினர்.

''அறம் பொருள் இன்பமான அறநெறி வளாமற் புல்லி மறங் கடிந் தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்'' என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்காகும். மன்னர்களன்றி மக்களும் இந் நெறியில் தலைப்பட வேண்டும். சுவாமி விவேகானந்தர் போன்ற நெஞ்சுரம் மிக்க இளைஞர்கள் நம் மத்தியில் தோன்ற வேண்டும். சமயநெறி நின்று நற்பணிகள் ஆற்ற இவர்கள் முன்வர வேண்டும்.

தத்தம் தாய்ச் சமயத்தில் உண்மையான பற்றும் ஆர்வமும் சமயத் தலைவர்களிடத்துப் பயபக்தியும் முன்னோர் வாக்குகளைத் தெளிந்தறியும் அறிவும் இளைஞர்களிடத்தில் ஏற்பட வேண்டும்.

### காலத்தால் மூத்தது

இளமை என்பது கூரிய கத்தி முனை போன்றது. அதனை நேரிய முறையில் மிக விளிப்பாகப் போற்றி வருதல் வேண்டும். பழையவற்றைப் புறக்கணித்தலும் புதியவற்றை மாத்திரம் பேணிக்கொள்ளுதலும்பெருந் தவறானவை.

''எப்பொருள்எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பது வள்ளுவர் வாக்கு. நமது சமயத்தின் பழம்பெரும் தத்துவக் கருவூலங்களை எமது இளைஞர்கள் உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்ள வேண்டும், உள்வாங்குதல் அவசியம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு காலத்திற்கேற்ற புதிய வழிவகைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எமது சைவ நெறி காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது; சீலத்தால் மூத்தது; செம்மையினால் மூத்தது என்பது உலகப் பேரறிஞர்களின் முடிவாகும் சைவ சித்தாந்தப் பெருநெறியைப் பற்றிப் போப் பாதிரியார் கௌடி என்னும் நாமம் கொண்ட அறிஞர் போன்றோர் இது ஒரு முறையான வாழ்க்கை நெறி என்று பாராட்டி உள்ளார்கள்.

பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் பக்தி இபக்கத்திற்கு அடிப்படை அருள் நூல்களாகும். நமது இளைஞர்கள் இவற்றில் தேர்ச்சி அடைந்த அறிஞர்களிடம் நாடிப்பயின்றால்தான் அகவாழ்வு பண்படும். புறவாழ்வு பண்படுதல் ஒரு போலித் தோற்றமாகும். உள்ளும் புறமும் ஒரே தன்மையதாகப் பண்படுவதற்கு சமய விளக்கம் இன்றியமையாதது. இத்தகையோர் மனிதருள்மாணிக்கங்களாகப் பிரகாசிப்பார்கள்.

கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

★

## எதிரொலி

- 500 கிலோ நிறையுடைய் சொக்லேற்றினால் உருவாக்கப்பட்ட கார் ஒன்று நியூயோர்க்கில் நடைபெறவுள்ள கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

★ நல்ல ருசியான கண்காட்சியாக இருக்குமே!

- அரசின் தீர்வு யோசனைகளுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கான கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் அவை நாடாளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படும்.

★ நாடாளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படுவது அவற்றின் இறுதிப் பயணமாக அமையுமோ, யார் கண்டார்கள்!

- பிரபாகரன் நீட்டிய கையை அரசு இப்போது பற்றாது விட்டால், எதிர்காலச் சந்ததியினர் அரசைத் திட்டுவார்கள் என ஐ. தே. க. எம்.பி. ஒருவர் கூறியுள்ளார்.

★ நாங்கள் இப்போது பற்றினால், மக்கள் மத்தியில்நீங்கள் எதையாவது 'பற்ற'வைத்து விடுவீர்களே என அரசு அவரைப் பார்த்துச் சொல்லக்கூடும்!

- யாழ் — வவுனியா ரயிலில் பிரயாணஞ் செய்த ஒருவர் இளநீரைப் பருகிய பின் தன் உடைமைகள் எல்லாவற்றையும் இழந்தார்.

★ அது இளநீர் அல்ல; இழ(ப்பு) நீர்!

- வெங்காயம், புகையிலை போன்றவற்றை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கப்பல் ஒன்று புறப்பட்டுள்ளது.

★ கப்பல் வரும் பின்னே; அதன் மணம் வரும் முன்னே — என்று சொல்லலாமோ?

- அரசாங்கம் நேர்மையாகப் பேச்சு வார்த்தை நடத்தினால், புலிகள் தம் கோரிக்கையைத் தளர்த்துவர் என்கின்றார் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ.

★ அப்படியானால், முன்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தை நேர்மையான முறையில் நடத்தப்படவில்லை என அவர் கருதுகிறார் என்பதுதானே!

- கண்டியிலுள்ள பெண்கள் உயர்தரக் கல்லூரி ஒன்றில் சிரேஷ்ட மாணவிகள் சிலரின் பகிடிவதை காரணமாக மாணவி ஒருத்தி தற்கொலை செய்துள்ளார்!

★ இதனைச் சட்டப்படி தற்கொலை என்று கூறினாலும் உண்மையாகப் பச்சைப் படுகொலையே!

- முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விமானக் குண்டு வீச்சினால் சிங்கள மீனவர்களின் படகுகள் சேதமடைந்தன, பத்து மீனவர்களைக் காணவில்லை.

★ வேலிக்கு வைத்த முள் காலில் தைத்திருக்கிறது!

(4ஆம் பக்கம் பார்க்க)

## உலகம் உங்களை விரும்ப....

உலகம் உங்களை விரும்ப எனும் வாக்கியம் ஆகுபெயரில் அமைந்திருக்கிறது. அதாவது உலகம் என்பது மக்களையே குறித்து நிற்கிறது.

மனிதப்பிறவிகள் யாவரும் தமது உள் மனதில் தம்மை எல்லோரும் விரும்ப வேண்டும், நல்லவன் என்று கூறவேண்டும் என்று விரும்புவர். இது இயல்பானது.

நல்லது; இந்த விருப்பம் வரவேற்கப்பட வேண்டியதே. அப்படியானால் உங்களை எல்லோரும் விரும்புவதற்கான வழிமுறைகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டுமல்லவா?

இதோ சில உத்திகள்:

★ மற்றவர் விரும்பினாலோ அல்லது விரும்பாவிட்டாலோ ஒருவரைப் பார்த்ததும் புன்னகை புரியத் தவறாதீர்கள்.

★ தெரிந்தோ தெரியாமலோ மனம் புண்படும்படி யாரையும் பேசாதீர்கள்.

★ பிறர் குறைகளையே நித்தம் பேசாதீர்கள்.

★ ஒருவருடைய வறுமைநிலைமையை சுட்டிக்காட்டிப்பேசாதீர்கள்.

★ பலர் முன்னிலையில் அயலவன் குறையைச் சொல்லாதீர்கள்.

★ நல்லதை நல்லதென்று கூறப்பழகுங்கள்.

★ மற்றவன் செய்தசிறிய உதவிக்கும் நன்றி சொல்ல மறவாதீர்கள்.

★ தக்க காரணம் இன்றிப் பிறரைக் கோபமூட்டாதீர்கள்.

★ உங்களைப் பற்றியே நித்தம் புகழ்ந்து பேசாதீர்கள்.

★ உங்கள் எதிரியின் வீட்டுக்குத்தானும் தற்சமயம் போக நேர்ந்தால் அவன் தரும் வரவேற்பை அசட்டை பண்ணாதீர்கள்.

★ எல்லாவற்றுக்கும் மேலாக இயேசு பிரான் கூறியவாறு உங்களை அடுத்தவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

தொகுப்பு: **அருட்திரு. ஐ. குமரேசன்**

## அமரர் கல்கிக்கு யாழ்ப்பாணத்துடன் உள்டான மனோ உலகத் தொடர்பு

இப்பொழுது கல்கி பிறந்த நூற்றாண்டு நடைபெறுகின்றது. படைப்பு இலக்கியத்தில் ஒரு புதுப் பாதையை ஏற்படுத்தி அன்றும் இன்றும் தமிழ் இலக்கியம் சிறப்புற்று விளங்கக் காரணமாயிருப்பவர் அவர். கல்கி அறுபது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது ஆனந்த விகடனில் இலங்கைப் பிரயாணம் தொடர் கட்டுரையை எழுதினார். அத்தொடர் கட்டுரையில் ''யாழ்ப்பாண ஞாபகங்கள்'' என்ற அவரது நகைச் சுவை பொதிந்த கட்டுரையில் அப்போதைய யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதனைத் தொட்டுக்காட்டும் பகுதிகளில் ஒன்று இது.

''நெஞ்சே! பொறு! பதறாதே''! என்பதாக, நாடகங்களில் கதாநாயகர்கள் சொல்வது போல நானும் என் மனதுக்கு இத்தனை நாளாகச் சொல்லிக்கொண்டு வந்தேன். இலங்கை யாத்திரையைப் பற்றி எழுதத் தொடங்கியதிலிருந்து, என் மனம் இடை இடையே ''யாழ்ப்பாணம்'' ''யாழ்ப்பாணம்'' என்று உருப்போட்டுக் கொண்டு வந்தது. ''யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத்தாரையும், அவர்களுடைய பேரன்பையும் பற்றிச் சொல்லாமல், வேறு என்னவெல்லாமோ கதை அளந்து கொண்டிருக்கிறாயே'' என்று என் நெஞ்சு இடித்துக்காட்டிக் கொண்டே வந்தது.

அப்போதெல்லாம் நான், ''நெஞ்சே! பொறு! பொறுத்தார் பூமி ஆள்வார் அல்லவா? உலகத்திலுள்ள முட்டாள்பசங்கள் எல்லாம் பூமி என்னுடையது, உன்னுடையது என்று அடித்துக் கொண்டிருக்கட்டும். நாம் பொறுமையாயிருந்து பூமியை அமுக்கிக்கொண்டு போய் விடலாம்.'' என்று என் நெஞ்சுக்கு கீதோபதேசம் செய்து வந்தேன். ஆனால், உண்மையில் மேற்படி பழமொழியில் எனக்கு நம்பிக்கை கிடையாது என்று நேயர்களுக்கு இரகசியமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் ஊரில் இம் மாதிரித்தான் ஒரு சாது மனுஷர் ''பொறுத்தார் பூமி ஆள்வார்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். கடைசியில்

தொகுப்பு:
**புத்தொளி**

என்ன ஆயிற்று? அந்தப் பொறுமைசாலிக்குப் பூமி கிடைத்ததா? ஆம்; கிடைத்தது! சரியாக ஐந்து அடி ஆறு அங்குலப் பூமி கிடைத்தது!

### மனோ உலகில் தொடர்பு

யாழ்ப்பாணத்தைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு உண்டாகி எத்தனையோ காலம் ஆயிற்று. அதை ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகவே நான் கருதி வந்தேன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தமிழகத்துக்கு அளித்த நகரமல்லவா யாழ்ப்பாணம்? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் புத்தகங்கள் 1, 2, 3 பாலபாடங்கள், ஹிந்து மதத்தின் பெருமைகளை விளக்கிக் கிறிஸ்தவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு புதிய கற்பித்தலில் வழிகாட்டியாக உதவுகின்ற நூல்

**நூல் : புதிய கற்பித்தலியல்**
**ஆசிரியர் : கலாநிதி சபா. ஜெயராசா**

நவீன உலக ஒழுங்கமைப்புக்கு ஏற்பவும் அடுத்த நூற்றாண்டின் மாற்றங்களுக்கு அமையவும் கற்றல் — கற்பித்தல் நிகழ்வுகளில் இன்று விருத்தி ஏற்பட்டு வருகின்றது. இதற்கமைய ஆசிரியர் சமூகம் சுதந்திரமாக புத்தாக்கம் பெற்று விழிப்புடன் செயற்படும் நல்ல சூழலும் உருவாகி வருகின்றது.

இச்சூழலுக்கு உதாரணமாக கலாநிதி சபா. ஜெயராசா அவர்களின் ''புதிய கற்பித்தலியல்'' நூல் உள்ளது. உலக ஆசிரியர் தின வெளியீடாக பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் எம்மவர்களுக்குப் புதிய கற்பித்தலியல் தொடர்பான அறிவு மிக மிக வேண்டப்படுகிறது. இந் நோக்கில் அவர் எழுதிய இந்நூல் ஆசிரிய உலகுக்கும் கல்வி ஆய்வாளர்களுக்கும் கல்வி அமுலாக்கல் பணியில் உள்ளவர்களுக்கும் கல்வி எண்ணங்களை விதைப்போர்க்கும் பல தளங்களில் பயன்படக் கூடியது.

புதிய தமிழ்க்கலைச் சொற்களைக் கையாளும் திறமை இந்நூலாசிரியரின் தனித்தன்மையாகும். அதற்கு இந் நூல் சான்றாகின்றது. விழுமியக்கல்வி தொடர்பான கற்பித்தலியல் இந் நூலுக்கு மேலும் அணி செய்கின்றது. புதிய கற்பித்தல் நுட்பவியல்கள், கற்பித்தல் இலக்குகளின் பகுப்பாய்வு, வகுப்பறையில் நுண் கணிப்பொறியின் பயன்பாடு, கற்பித்தலியல் இதவடிவங்கள் நுண்கற்பித்தலியல், நவீன தொடர்பியற் சாதனங்களும் கற்பித்தல் நுட்பவியல்களும் இன்னும் பல சிறப்பான புதிய கற்பித்தலியல் உள்ளடக்கங்களுடன் நூல் திகழ்கின்றது.

கற்பித்தலியலில் இதவடிவங்கள் என்ற பகுதியில் இதவடிவங்களை (Modules) அடிப்படையாகக் கொண்ட கற்றலும் கற்பித்தலும் குறைந்த அளவு நேரத்தில் கூடிய வினையாற்றல்களை வருவிக்கவல்லது.

பின் அவற்றுக்கும் பொருத்தமான வகையிலே செயற்பணிகளை பகுத்து ஆராய்ந்து பயிற்சி இலக்குகளை உருவாக்குதல் முக்கியம் பெறுகின்றது. குறித்த பயிற்சியுடன் தொடர்புடைய பத்திரிகைகள், நூல்கள், கையேடுகள், சஞ்சிகைகள் முதலியவற்றை அடுத்து மதிப்பீடு செய்தல் வேண்டும். இது மாணவரை நடுநாயகப்படுத்தி அவர்கள் தாமாகவே கற்பதற்கும், தாமே துலங்குவதற்கும் இடமளிக்கும். கற்பித்தலியல் இத வடிவங்கள் நவீன முறையாக வளர்வதுடன் புதிய தொழில்நுட்ப தொடர்பு சாதனங்கள், கணனி இன்ரர்நெற் ஆகியவற்றின் பயன்பாட்டுடன் மேலும் விருத்தியாகவல்ல அகல் சிந்தனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நவீன தொடர்பியல் சாதனங்களினூடாக கற்பித்தல் நுட்பங்கள் நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. இன்று அனைவருக்கும் இத்துறை மிக அவசியமாகும்.

## நூல் வரிசை

பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் தொலைதூரத்திலுள்ள பேராசிரியர்களிடமிருந்தும், வள நிலையங்களில் இருந்தும் எழுதப்பட்ட ஒரு விடயத்தை அல்லது வரைபடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ''பெசிமிலி'' (Facimile) என்னும் தொலைப் பதிவுக் கருவி துணை செய்கின்றது.

விரைவாக அறிவை கற்புல வடிவிலே கையளிக்கும் இந்தச் செய்முறையானது அறிவின் பரம்பலைக் குறுகிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அருள் இன்பம் பரப்பிய திருமுறை இசைக் கச்சேரி

தேவாரம் முதல் புராணம் ஈறாகப் பன்னிரு திருமுறைகளும் பக்தி பூர்வமாக ஓதுதற்கு உரியவை. அவ்வாறு பக்தி பூர்வமாக ஓதுகின்றவர்கள் ''ஓதுவார்கள்'' என்று அழைக்கப்படுகின்றார்கள்.



தேவார இசைமணி
**எஸ். ஆர். திருஞானசம்பந்தன்**

நாவலர் பெருமானின் காலத்தில் திருவாவடுதுறையில் இருந்து ஓதுவார்களை நல்லூர்த் திருவிழாக் காலத்தில் அவர் அழைத்து வந்தார் என்பது சரித்திரம். திருமுருகன் திருவீதி எழுந்தருளுகின்றபோது சுவாமியின் பின்னே ஓதுவார்கள் திருமுறைகளை ஓதித் தாமும் மகிழ்ந்து, யாழ்ப்பாணத்து மக்களையும் மகிழவைத்தார்கள் என்று அறிய முடிகின்றது.

நாவலர் மறைவுக்குப் பின்னர் குப்பிளான் இசை வல்லார் செல்லத்துரை, தாவடியூர் எஸ். இராசையா உள்ளிட்ட பெரியார்கள் சிறந்த ஓதுவார்களாகத் திகழ்ந்தார்கள். பக்தி பூர்வமான முறையில் திருமுறைகளை மக்களிடையே பரவச் செய்வதில் முக்கிய பங்கினை வகித்தார்கள்.

தாவடியூர் எஸ். இராசையா அவர்கள் நல்ல ஞானஸ்தர். வாத்தியங்களை இசைக்கக் கூடியவர். இசை வல்லார் செல்லத்துரை அவர்களது பண்ணிசைக் கச்சேரிகளுக்குக் ஹார்மோனியம் வாசித்தும், சேர்ந்து பாடியும் தனியாகப் பண்ணிசைக் கச்சேரிகளை நடத்தியும் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

அவரின் புதல்வரே இன்று இங்கு சிறந்த ஓதுவாராகப் பிரகாசித்து வரும் தேவார இசைமணி தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தன்.

தந்தையாரிடமும் தமிழ்நாட்டில் வாழ்ந்த பெரி வித்துவான்களிடமும் திருமுறைகளைச் சிறப்பாக ஓதுவதிற் பயிற்சி பெற்றவர். இவரது பண்ணிசைக் கச்சேரிகள் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களில் இடம்பெற்றதுடன் ஆங்காங்கு பல வித்துவான்களினது பாராட்டுதல்களையும் பெற்றார்.

இலங்கையில் திருமுறைக் கச்சேரிகளைச் செய்தும் ஆர்வமுள்ள மாணவர்களுக்குத் திருமுறை வகுப்புக்களை நடத்தியும் வருகிறார் திருஞானசம்பந்தன்.

நல்ல சாரீரவளமுள்ள இவரது திருமுறை இசைக்கச்சேரியைச் சமீபத்தில் நீராவியடிப் பிள்ளையார் கோயிலிற் கேட்டவர்கள் இவரையோ இவரது திருமுறை இசைச்சேவையினையோ ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள்.

சிவப்பொலிவுடன் விளங்கிய சம்பந்தன், நால்வர் துதிப்பாடலான, பூழியர் கோன் வெப்பொழித்த, என்ற பாடலைக் கம்பீர நாட்டையிற் பாடி முதலிலேயே மக்கள் உள்ளங்களை தம்பால் ஈர்த்துவிட்டார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய ''தடநிலவிய ......'' என்ற தொடக்கத்தையுடைய திருவீழிமிழலைத் தேவாரத்தை நட்டபாடைப் பண்ணில் மலலாரி அமைப்பில் பாடியமை செவிக்கு விருந்தாக அமைந்தது.

அடுத்து ''பொருந்தாத செய்கை'' என்னும் திரு

### கலைச்சுடர்

வாய்மூர்த் தேவாரத்தினை ஹரிகாம்போதியில் அருமையாகப் பாடினார். மோகன இராகத்தில் ''சிந்தனை நின் றனக்காக்கி...'' என்னும் முதலையுடைய திருவாசகத்தைச் சம்பந்தன் அவர்கள் உருகி உருகிப் பாடினார், சபையினரும் உருகியே விட்டார்கள்.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் முதலானவற்றையும் பஞ்சபுராணஒழுங்கிற் பாடிமுடித்த சம்பந்தன் கர்நாடக தேவகாந்தாரி இராகத்தில் ஆதி தாளத்தில் ''எழு கடல் மணலை...'' என்ற திருப்புகழைப் பாடியபோது உண்டான அருள் இன்பத்துக்கு எல்லையே இல்லை.

குறித்த திருமுறை இசையரங்கு சோபிப்பதற்கு உதவிய பக்கவாத்தியக் கலைஞர்களோ கைதேர்ந்த வித்துவான்கள். பழம்பெரும் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வர சர்மா வயலினும், இசைக்கலைமணி எஸ். துரைராசா மிருதங்கமும், சங்கீத பூஷணம் இசைப்பேரறிஞர் கே. ஆர். நடராசா கஞ்சிராவும், செல்வன் ரமணா மோர்சிங்கும் வாசித்தார்கள். பக்கவாத்தியக் கலைஞர்களின் வாசிப்பு அடக்கமானது; அற்புதமானது. ★

ஆசிரியமணி:
**அ. பஞ்சாட்சரம்**

# சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# அமரர் கல்கிக்கு....

(மூன்றாம் பக்கத் தொடர்)

மதத்தைக் கண்டித்துப் பிரசாரம் செய்த நூல்கள் எல்லாவற்றையும் நான் படித்தேன்.

பாலபாடங்களைப் படித்ததிலிருந்து தமிழை எவ்வளவு சரளமாகக் கையாளலாம் என்பதை ஒருவாறு அறிந்து கொண்டேன். மதப்பிரசுரங்களிலிருந்து தமிழ் மொழி எவ்வளவு வன்மை பொருந்தியது என்பதையும் அறிந்தேன் தமிழில் வசனநடை. எழுதி வழிகாட்டிய பெரியார்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதன்மையான ஒருவர் என்று பிற்காலத்தில் தான் எனக்குத் தெரிய வந்தது.

அந்த நாளிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கும் எனக்கும் மனோ உலகில் தொடர்பு ஏற்பட்டு விட்டது. பிற்பாடு இந்த உறவு வளருவதற்குரிய மூன்று ஏதுக்கள் ஏற்பட்டன. ஒன்று தேச சேவை, இரண்டாவது சமயப்பற்று, மூன்றவாது தமிழபிமானம் இந்த மூன்றுக்கும் பிரதிநிதிகளாக எனக்கு மூன்று நண்பர்கள் ஏற்பட்டார்கள். அவர்கள் ஸ்ரீ சிவகுருநாதன், ஸ்ரீ அம்பிகைபாகன், ஸ்ரீ சிவபாதசுந்தரம் என்பவர்கள்.

### அழகான பெயர்கள்

இந்த யாழ்ப்பாணத்தாரின் பெயர்கள் தான் எவ்வளவு அழகாயிருக்கின்றன என்று அதிசயிக்கிறீர்கள் அல்லவா? யாழ்ப்பாணத்தாரிடம் அதிசயிக்கவேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. எமது மோட்டார் வண்டி யாழ்ப்பாணத்தின் கடைத்தெருவை அடைந்தது. ஒருவர் வண்டியை நிறுத்தி 'லேடி ராமநாதன் சாயங்காலம் ஐந்து மணியிலிருந்து உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைத் தாண்டி, சுன்னாகத்தை அடைந்தோம். ஒரு விஸ்தாரமான தோட்டத்துக்குள் மோட்டார் சென்று, பங்களாவின் வாசலில் நின்றது. அங்கே ''வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும்'' கலைமகளைப் போன்ற ஒரு மாதரசி நின்றார். அவரை ஏற்கனவே நாங்கள் பார்த்திருக்கிறோம். சென்னையில் நடக்கும் சங்கித விழாக்களில் அவரும் அவருடைய புதல்வியும் கச்சேரிகளுக்குத் தவறாமல் வந்து கேட்டு அனுபவிப்பார்கள். அவர்தான் லேடி ராமநாதன்.

இவருடைய வீட்டுக்கு எப்படி விருந்தாளிகளாக வந்தோம் என்பதையும் சொல்ல வேண்டும். கொழும்பில் எமது வரவேற்புக்குத் தலைமை வகித்த ஸ்ரீ நடேச பிள்ளை ''நீங்கள யாழ்ப்பாணத்திற்கு வரும் போது எங்கள் வீட்டுக்கும் வரவேண்டும்'' என்று கேட்டிருந்தார். மேலும் சேர். பொன்னம்பலம் இராமநாதன் வாசம் செய்த வீட்டில் சில நாள் தங்கியிருக்கும் பாக்கியம் கிடைப்பதென்றால் எளிதில் மறுதலிக்கக் கூடியதா? எங்களுடைய வாழ்க்கையிலேயே ஓர் அதிசயமான அனுபவம் யாழ்ப்பாணத்தில் கிடைத்தது.

விருந்தோம்பும் குணத்தில் சிறந்த எத்தனையோ வீடுகளை நானும் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த மாதிரி விருந்தோம்பலைப் பார்த்ததேயில்லை. லேடி ராமநாதன் எங்களிடம் காட்டிய அன்பு தாயின் அன்பைக் காட்டிலும் சிறந்திருந்தது என்று தான் சொல்ல வேண்டும். காலையில் எழுந்ததும் லேடி ராமநாதன் வருவார். ''இராத்திரிச் சுகமாய்த் தூங்கினீர்களா?'' என்று கேட்பார் ''ஆம், தூங்கினோம்'' என்று நாங்கள் சொன்னாலும் அவர் திருப்தியடையமாட்டார். முன்னால் கொஞ்ச நேரம் மிகவும் புழுக்கமாயிருந்தது. ஆனால் அப்புறம் காற்று வரத் தொடங்கிவிட்டது இல்லையா? இப்படி அவர் கேட்கும் போது முன்னாலேயே புழுக்கமில்லாமல் காற்று வரும்படி செய்யத் தம்மால் முடியவில்லையே என்ற வருத்தம் அவருடைய குரலில் தொனிக்கும்.

அந்த வீட்டில் நாங்கள் தங்கியிருந்த மூன்று தினங்களிலும் ஒரே ஒரு குறை தான் எங்களைப் பிடுங்கித் தின்றது. ''இந்த சாமான் இல்லை. அனுப்பினால் தேவலை'' என்று கேட்டு வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் சந்தர்ப்பமே கொடுக்கவில்லை. ஊருக்கு நாங்கள் தபால் எழுதுவதற்கு லெட்டர் பேப்பர், கவர், தபால் தலை, மைக்கூடு, பேனா இவ்வளவும் எங்கள் அறையில் தயாராக இருக்கும்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் சீவியந்தராக இருந்த காலத்தில் ஏற்பட்ட சம்பிரதாயம்தான் அவருடைய தர்மபத்தினியினால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றதென்று அறிந்தேன்.

லேடி ராமநாதனுடைய வீட்டில் நாங்கள் விருந்தாளியாக இருந்தபோது, உண்மையில் யாழ்ப்பாண வாசிகளின் விருந்தாளிகளாகவே எங்களை எண்ணிக் கொண்டிருந்தோம். சேர் பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். அவருடைய மாப்பிள்ளை ஸ்ரீ நடேசன் இப்பொழுது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பகுதிக்கு நாடாளுமன்றப் பிரதி நிதியாக இருக்கிறார். யாழ்ப்பாண வாசிகளும் இந்த மாதிரியே தான் கருதினார்கள். அவர்கள் வேறு விதங்களில் எங்களிடம் காட்டிய அன்பிலிருந்து இது தெளிவாயிற்று. ★

# எதிரொலி...

● வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்புக்குச் செல்வோர் தங்குவதற்காக அரச செலவில் தெகிவளையில் விடுதி ஒன்று அமைக்கப்படும்.

★ நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, புதிதாக விடுதியொன்றைக் கட்டுவதற்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடாமல், மிருகக் காட்சிச் சாலையின் ஒரு பகுதியைப் பயன்படுத்தலாமே என்று சில இராணுவ - பொருளாதார நிபுணர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கக்கூடும்!

● யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரு வீழ்ச்சி கண்டுள்ளது என ஐ. நா. நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

★ அதே வேளையில், தனிப்பட்ட சிலரின் பொருளாதாரம் பெருவளர்ச்சி கண்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும் என்கிறார் ஒரு சாதாரண குடிமகன்!

— இடியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைச் சிறப்பாகப் பராமரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 6

கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் வ[illegible]போர் சிறப்பாக பராமரிக்கப்படவேண்டும் என்று முதியோர் இல்ல ஆலோசனைச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆலோசனைச் சபையின் கூட்டம் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் முதியோர் இல்ல மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

மழைக் காலமாக இருப்பதால் இங்குள்ள முதியோர்களுக்கு நுளம்பு வலையும், மெத்தைகளும் வழங்கப்படவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை முதியோர் இல்லச் சுற்றாடல் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மாணவர்களினால் கடந்த வாரம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (இ-5-30)

## செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

பாடசாலைக் கண்காணிப்பை பயனுறுதிமிக்கதாக்கும் சிரேஷ்ட பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என முன்னர் வெளியான செய்தி தவறானதாகும். (ஐ-ரீ)

# நல்லை ஆதீனத்தில் நாவலர் குருபூசை விழா

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.இந்துசமயப் பேரவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமன்றத்துடன்இணைந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழாவை நடத்தவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை, பிற்பகல் 2 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும்.

விசேட நிகழ்வாக கவிஞர் இ. முருகையன் தலைமையில், ''நாவலர் பிறந்திலரேல்'' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறும். கவிஞர் சொக்கன், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, 'ஞானக்கவிமணி' பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர், கவிஞர் சோ. பத்மநாதன், மதுரகவி எம். பி. அருளானந்தம், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் கவியரங்கில் கலந்து கொள்வர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவாக அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட கவிதை. கட்டுரைப போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (ஐ-8)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 6

வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க காரியாலயத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியிலுள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-8)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

இராமநாதன் நுண்கலைத்துறை

இசைமாணி/ நாட்டியமாணி/ இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி.

புதிய அனுமதி 1998

விசேட செய்முறை, நேர்முகப்பரீட்சைகள்

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை தோற்றாத மாணவர்களுக்கான விசேட செய்முறை, நேர்முகப்பரீட்சைகள் எதிர் வரும் 12.12.98 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து 10.12.98க்கு முன்பதாக பரீட்சைக்கிளையில் சமர்ப்பிக்கவும்.

பதிவாளர்

(சி/5714)


# செயற்கைக் கால் தயாரிப்பு நிறுவனம்

## வன்னியில் ஆரம்பம்

வவுனியா, டிசெ. 6

சர்வதேச ஊனமுற்றோர் தினமான கடந்த வியாழன்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் ''வெண்புறா'' செயற்கைக் கால் தயாரிப்பு நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி சிவகுரு தலைமையில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சி ஒன்றில் மேற்படி நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை —

சர்வதேச ஊனமுற்றோர் தினக் கொடிவார ஆரம்ப நாள் நிகழ்வுகளும் நேற்று முன்தினம் வள்ளிபுரம் 'இமய வாழ்வு' இல்லத்தில் நடைபெற்றது. (ஐ-6)

# ஜெனரேட்டர் பாவிப்போருக்கு மின்சாரசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 6

குடாநாட்டில் ஜெனரேட்டர்களைப் பாவித்து மின்சாரம் பெறுவோர் மின்சார சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் மின்சார விநியோகத்துக்கு இந்த ஜெனரேட்டர் பாவனை ஆபத்தை ஏற்படுத்துவதால் இந்த அறிவிப்பை விடுக்க வேண்டியுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நல்லூர் முத்திரைச்சந்தைப் பகுதியில் மின்சார விஸ்தரிப்புக்காக மின்கம்பத்தில் தமது ஊழியர் ஒருவர் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் அப்பகுதியில் உள்ள ஓர் இடத்தில் ஜெனரேட்டர் இயக்கப்பட்டதாகவும் —

பிரதான மின் இணைப்பு கேபிள்கள் ஊடாக அந்த ஜெனரேட்டர் மின் பாய்ந்ததால் அந்த ஊழியர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்ததாகவும் —

மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்படியான அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஜெனரேட்டர்களைப் பாவிப்போர் மின்சாரசபையுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று மின்சார சபை கேட்டுள்ளது. (ஐ-3)

# கூட்டுறவுச் சங்கங்களில் சீனி விலை அதிகரிப்பு

அரியாலை, டிசெ. 6

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றிற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் முன்னர் சங்கங்களில் 30 ரூபாவாக விற்கப்பட்ட ஒருகிலோ சீனியின் விலையை 34 ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

கப்பற் கட்டணம் மற்றும் வெளிச்சந்தையில் விலை அதிகரிப்பு போன்ற நிலைமைகளுக்கு அமைவாகவே சீனி உட்பட சில பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிவப்பு நாட்டரிசி, சிவப்பு உடையல் அரிசி, சிவப்பு திட்டல் அரிசி, மைசூர்ப்பருப்பு, தேங்காய்எண்ணெய், அங்கர், லக்ஸ்பிறே பால்மா, மீன்ரின், மோட்டின் நூளம் புத்திரி, சன்லைட், லக்ஸ் போன்ற பொருள்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-17-100-7)


மானிப்பாய்

கோ. ப. பல நோக்கு கூ. சங்கம்

கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் 5,500 வெற்றுச் சாக்குகளும், 33,000 வெற்றுப் பைகளும் விற்பனைக்கு உண்டு. மீளளிப்பு வைப்பாக ரூ. 500 செலுத்தி சங்கத்தினால் வழங்கப்படும் பத்திரத்தில் தங்கள் கூறுவிலைகளைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு 10—12—98 இற்கு முன்னர் சங்கத்தில் ஒப்படைக்கவும்.

பொது முகாமையாளர்

மானிப்பாய் பல நோ. கூ. சங்கம், மானிப்பாய்.

( C/5713 )


# விவசாயக் கடன் வழங்க ஒருகோடி 10 லட்சம் ரூபா

## இலங்கை வங்கி ஒதுக்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். மாவட்டத்தில் விவசாயக் கடன் வழங்குவதற்காக இலங்கை வங்கியினால் ஒரு கோடியே 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் இலங்கை வங்கிப் பிரதிநிதி தெரிவித்தார்.

விவசாயக் கடனுக்கான வட்டி 12 வீதமாகவும், சுயதொழில் கடனுக்கான வட்டி 12 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## தையற் பயிற்சி நிலையம்

வட கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 6 மாத காலத்துக்கான தையற் பயிற்சி வகுப்பு இந் நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரணதரத்தில் சித்தியடைந்த 30 பெண்கள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புப் படியும், பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கபபடும்.

பயிற்சி பெற விரும்புவோர் கரவெட்டி பிரதேச செயலருக்கு இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## உளநலக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.6

உளநல மேம்பாட்டுக் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணியளவில் கைதடி கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் ஆசிரியர் எஸ். கருணாகரன் உளநல மேம்பாடு பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். (ஐ-5)


உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி (07—12—1998) திங்கட்கிழமை பிற்பகல் 3-35 மணி முதல் 4-00 மணி வரை வரும் மேடலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் சதாசீலன் (கனடா) அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி நிசாந்தினி அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழத் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி க. சுந்தரலிங்கம் (இளைப்பாறிய இ. போ. ச. சாலைப் பரிசோதகர்) குடும்பத்தினர்
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

திரு. திருமதி என். அருணகிரிநாதன் குடும்பத்தினர்
'' ஈஸ்வரி இல்லம் ''
ஆவரங்கால், புத்தூர்.

வரவேற்பாளர்கள்: திரு. திருமதி க. தர்மலிங்கம் J. P. (மணமகன் சிறிய தந்தை)
திரு. திருமதி சு. சத்தியேந்திரன் (மணமகன் சகோதரன்)
(D. O. சமநல சேவைத் திணைக்களம், கைதடி, சாவகச்சேரி)
திரு. திருமதி சொ. லோகேஸ்வரன் (மைத்துனர்)

★ இரு வீட்டார் அழைப்பு ★

(61030)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருத்துதல்

உங்களுடையசகலவிதமான தட்டச்சு இயந்திரங்களையும் சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: ஏ. எஸ் செந்தூரன், இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி (A.G.A அலுவலக அண்மையில்).

(61084)

## தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: தனபாலசிங்கன், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(61114)

## MATHS CLASS 1999

ஆண்டு 6 முதல் O/L வரை உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் கற்பிக்கப்படும். விரிவுரை K. E. சங்கர். உடன் தொடர்பு: 501A, மொகடீன் பள்ளி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(61112)

## SPOKEN ENGLISH

சிறு குறுப்பாக, சுலபமாக இலக்கணம் இன்றி குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி Cer/Dip in Science (London) 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(61116)

## வழிபடுவோர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம். டிசெ. 6

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வழிபடுவோர் சங்கக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தும்பளை 'கோகுலம்' வால்டன் இடத்தில், பொ. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

# ENGLISH CLASSES

ஆண்டு 6 முதல் 11 வரையான ஆங்கில மொழி இலக்கிய வகுப்புக்கள் இன்று 6-12-98 ஆரம்பமாகின்றன.

அனுமதிக்கு பெற்றோருடன் கீழ்க்கண்ட நேரங்களில் வரவும்.

| ஆண்டு | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|
| நேரம் | 8.30 a.m. | 9.30 a.m. | 10.30 a.m. | 11.30 a.m. | 12.30 p.m. | 1.30 p.m. |

திரு. K. சுப்பிரமணியம்
62, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(61080)

# அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

சுன்னாகம்.

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசித்துவரும் முஸ்லிம் மக்களால் குத்தகைக்குப் பெறப்பட்ட சுன்னாகம் மத்திய சந்தைக் கடைகளிலிருந்து வருமதியாகவுள்ள வாடகை நிலுவைகளை ஒக்ரோபர் 1990 இல் இருந்து டிசெம்பர் 1996 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு வடக்கு-கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்துடன் நீக்கி விடுவதெனவும் **31—12—98** க்கு முன்னர் சகல முஸ்லிம் கடைக்காரர்களும் திரும்ப வந்து உரிய கடைகளைப் பொறுப்பெடுத்து ஒப்பந்தப் பத்திரத்தை புதுப்பித்தல் வேண்டுமெனவும் இல்லாவிடில் அவர்களின் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு புதிய விண்ணப்பம் கோரப்பட்டு கடைகள் வாடகைக்குக் கொடுப்பதெனவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 10-09-98 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் கடைச் சொந்தக்காரர்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். அத்துடன் தமது தற்போதைய வதிவிட முகவரியை பிரதேசசபைக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தி. மா. செல்வராசா (ஜே.பி.,யு.எம்.)
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்

வலி. தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.
20.11.98

(சி-5709)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,

மானிப்பாய்.

## மீள்கேள்வி அறிவித்தல் - 1999

01) கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: **17-12-1998** நண்பகல் 12-00மணி வரை.
02) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: **18-12-1998** நண்பகல் 12-00 மணி வரை.
03) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: **18-12-1998** பிற்பகல் 2-00 மணி
04) கேள்விப்பத்திரங்களை உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
05) மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் கிராமம்** | | | | | |
| 01) | மாட்டிறைச்சிக் கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 76,100/- |
| 02) | காக்கைதீவுச் சந்தை | — | 1,000/- | 100/- | 25,000/- |
| 03) | ஆட்டிறைச்சிக் கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 10,100/- |
| 04) | ஆட்டிறைச்சிக் கடை சாவற்கட்டு சந்தை | 250/- | 1,000/- | 100/- | 10,000/- |
| 05) | கருவாட்டுக் கடை | 100/- | 500/- | 100/- | 1,250/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
தலைவர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய். 04-12-1998.

(சி/5712)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

## நடேசு சின்னத்துரை

(முன்னாள் உரிமையாளர், நெல்லியடி தயாளினி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)

06-11-98 இல் கனடாவில் இறைபதம் எய்திய அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

உற்றார், உறவினர்கள்.

நெல்லியடி,
கரவெட்டி.

(சி/5715)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணக மலர்வு
22 — 08 — 1942



விண்ணக விரைவு
16 — 12 — 1997

## செல்வி தம்பிஐயா தவமணி

திதி: திருதியை 6-12-98

அன்னாரின் ஆண்டுத்திவசம் இன்று (6-12-98) ஞாயிறு எமது வீட்டில் நடைபெறும். அத்தருணம் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும், மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
சகோதரிகள்.

சரசாலை வடக்கு.

(60952)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் கந்தர் முருகன்

(வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு.)

மண்ணில்: **24-01-1918** — விண்ணில்: **06-11-1998**

தன் துணையிழந்த மூத்தவளோ
உம் துணையோடு வாழ்ந்த வேளை
காலனவன் கண்ணில் பட்டதுவோ
கொள்ளி வைக்கவெனவிங்கிருந்தவனும்
— விதிவசத்தால்
கொழும்பு சென்று நிர்க்கதியாய்— உங்கள் மூத்தவன்
துயரச் செய்தி கேட்டு துடிதுடித்து ஓடிவந்து
உமதுடலைக் காணாதுளம் நொந்து போக
நீர் பெற்ற ராசனோ உம் சுற்றத்தாரோடு
— சூரிச் நகரில்
உமது துயர் கொண்டாட
கடைக்குட்டி குகதாசன் (கடவுள்) கனடாவில்
காலமெலாம் உம் நினைவில் கண்ணீரோடு வாழ
காலனவன் ஏனோ கவர்ந்தான் உமதுயிரை
தாங்குமோ தவமணி உள்ளம்,

எமது அப்பாவின் இறந்த துயர் கேட்டு எம்மோடு துயரத்தில் கலந்து ஆறுதல் கூறிய சகலருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(61121)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வங்குரோத்தா? வக்கிரமா?

அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை, தான் ஆதரிக்கப்போவதில்லை — தமது கட்சி ஆதரிக்கமாட்டாது— என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா திட்டவட்டமாக, உறுதிபடக் கூறிவிட்டார்.

அதே வேளை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளமையை வரவேற்று, அரசாங்கம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

ஐக்கியதேசியக் கட்சியின் இந்தக் கலங்கிய நிலை அதன் அரசியல் வங்குரோத்துத் தன்மையையும் மறுபுறத்தில் வக்கிரத் தனத்தையும் பிரதிபலிக்கிறது.

ஐ.தே.கட்சி போலவே— ரணில் விக்கிரமசிங்கா போலவே — ஆளும் கட்சியும் வங்குரோத்து, வக்கிர நிலையை அடைந்திருக்கிறது.

எதிர்க்கட்சியின் ஆதரவின்றித் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாது, நடைமுறைப்படுத்த முடியாது என்பது நன்றாகவே தெரியும். எனினும் தனது தீர்வு யோசனையை நாடாளுமன்றத்தில் சட்ட வரைவாகச் சமர்ப்பிக்க அது முனைந்துள்ளது.

தீர்வு யோசனைக்கு இறுதி வடிவம் கொடுப்பதிலும், அதனைச் சட்ட நகலாக்குவதிலும் அரசாங்கம் தனது நேரத்தைச் செலவிடுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

நாங்கள் ஒரு தீர்வைத் தயாரித்தோம்; நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தோம்; எதிர்க்கட்சி ஆதரவளிக்கவில்லை என்று பிரசாரம் செய்வதற்கு மட்டுமே அரசின் இந்தச் செயற்பாடு உதவும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கிய பங்காளியாக விளங்கும் — விளங்க வேண்டிய— விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு விடுத்த அழைப்புக் குறித்து கவனத்தில் எடுக்காமல், மறுமொழி சொல்லாமல், சட்ட வரைவு தயாரிப்பதில் முனைப்பாக இருப்பது தீர்வுக்குரிய சாதகநிலையை குழப்பியடிக்கும் செயலாகும்; நிராகரிப்பதுமாகும்.

வவுனியா—கிளிநொச்சித் தரைப்பாதையைத் திறப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட — நாட்டின் போர்ச் சரித்திரத்தில் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை என வர்ணிக்கப்பட்ட— 'வெற்றி உறுதி' யை அரசு தொப்பெனக் கைவிட்டுள்ளது. தான் வகுத்த இலக்கை அடையாமலே இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகிவிட்டதாக அறிவித்திருக்கிறது!

அரசின் இந்தச் செயற்பாடுகள் அது தடுமாற்றம், குழப்பம் அடைந்திருப்பதையும் நிதானம் இழந்திருப்பதையுமே புலப்படுத்துகின்றன.

மக்கள் நலன் கருதியே ஓர் அரசாங்கம் செயற்படவேண்டும். ஆனால் இலங்கையில் ஆட்சி நடத்தும் அரசியல் தலைவர்களிடம் அது மருந்துக்கும் இல்லை.

ஆளும் கட்சியினர் வழமை போலவே தமது சொந்த அரசியல் நிகழ்ச்சியை நிறைவேற்ற முயல்கின்றனர்.

# கழுத்து நெரிக்கப்பட்டதற்கான அடையாளத்தை சடலத்தில்கண்டேன்

## மரண விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

காலஞ்சென்றவரின் சடலத்தை அவரது வீட்டிற்குள் சென்று பார்வையிட்ட பொழுது கழுத்து நெரிக்கப்பட்டதற்கான காயங்கள் காணப்பட்டன.

வண்ணார் பண்ணை நாச்சிமார் கோயிலடியில் வசித்த திருமதி கிருஸ்ணசாமி வாலாம்பிகை (68 வயது) என்பவரின் மரணம் தொடர்பான மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது பெறாமகனான இராஜரத்தினம் கணேசராசா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி க. கேசவன் யாழ். ஆஸ்பத்திரியில் நடத்தினார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறிபதாவது;-

காலஞ்சென்றவர் தனித்து வாழ்ந்துவந்தார். சம்பவம் நடைபெற்ற அன்று வீட்டினுள் இவர் இறந்து கிடப்பதாக அறிந்து உள்ளேசென்று சடலத்தைப் பார்த்த பொழுது கழுத்தில் நெரிக்கப்பட்டதற்கான அடையாளம் காணப்பட்டதுடன் அவரது காதுகளிலிருந்த தோடுகள் காணாமற் போயிருந்ததைக் கண்டேன்— என்று தெரிவித்தார்.

இறந்தவரின் மருமகன் முறையான செல்லத்துரை லோகேஸ்வரன் என்பவரும் சாட்சியமளித்தார்.

சாட்சிகளைப் பதிவு செய்து கொண்ட மரணவிசாரணை அதிகாரி சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-5)

## வெற்றிலை திருட்டு

சுன்னாகம், டிசெ. 6

சுன்னாகம் தெற்குப் பகுதியில் இரு வீடுகளில் வெற்றிலைத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழனன்று இரவு வேளை வேலியை வெட்டி உட்புகுந்த திருடர்கள் கொல்லையில் இருந்த வெற்றிலைகளைப் பிடுங்கிச் சென்றுள்ளனர்.

தற்போது சந்தையில் 5 ரூபாவுக்கும் கூடுதலான விலையில் வெற்றிலை விற்பனையாகி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-27)

## நில அளவையியல் கற்கைநெறி

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிரிவில் அடிப்படை நில அளவையியலும் படவரையியலுக்குமான கற்கைநெறி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு சுமார் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-9)

## வலி. வடக்கில் சோலைவரி அறவிடாதிருக்க முடிவு

சுன்னாகம், டிசெ. 6

வலிகாமம் வடக்குப் பகுதியில் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வரி அறவிடுவதில்லை என வலிகாமம் வடக்குப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

இப்பகுதியில் மக்கள் குடியேறி, நஷ்டஈடு பெற்று சுகபோக வாழ்வு வாழும் வரை சோலைவரியை அறவீடு செய்வது அநியாயம் எனக் கருதுவதாக மேற்படி பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தமது வரவு செலவுத் திட்டச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமை மாறுமிடத்து சோலைவரி மீளக் கணக்கிடப்பட்டு அறவிடப்படுவதே உசிதமானது எனவும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-27)

## 5 கல்வி வலயங்களிலும் விளையாட்டு மைதானம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலும் நானூறு மீற்றர் ஓட்டப் பாதை கொண்ட விளையாட்டு மைதானங்களை அமைக்குமாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை — அனலைதீவு, எழுவைதீவு போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதிகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

வலயக் கல்விப்பணிப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 1, 6, 9, வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட மாற்றம் சம்பந்தமான ஆசிரியர் கைந்நூல் யாழ். மாவட்டத்துக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6

கணக்காய்வாளர் தரம் 2 இதற்கு ஆள் சேர்ப்பதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் போக்குவரத்து இன்மையால் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாண விண்ணப்பதாரிகள் சமுகமளிக்க முடியாதுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே நேர்முகப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இவ் விடயம் குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் கே. எஸ். பெரேராவுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டது.

(உ-7-5-173-15)

## ஊனமுற்றோர் தின விழா

வடமராட்சி, டிசெ.6

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் நடத்தும் ஊனமுற்றோர் தின விழா எதிர் வரும் புதன்கிழமை பிரதேச செயலர் பி. வேலாயுதம்பிள்ளை தலைமையில் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும்.

மருதங்கேணி கிராமிய அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி க. சிதம்பரநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் அ. அ. நடராசா, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் க. ஈஸ்வரபாதம், மருதங்கேணி ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் பொ. இராமச்சந்திரன், இளைப்பாறிய அதிபர் பொ. சங்கரப்பிள்ளை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் க. யோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

ஊனமுற்றோர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படும். (ஐ-173)

## சுயதொழில் நிதி உதவி

வடமராட்சி, டிசெ. 6

சுயதொழில்களை மேற்கொள்ளவென கரவெட்டி மத்தியைச் சேர்ந்த எட்டுப் பெண்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் மக்கள் வங்கியில் கடன் பெற்று இந்நிதியை வழங்கியுள்ளது. (ஐ-173)

## பூஜை அறை; திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.6

சித்தங்கேணி பிளவத்தை அ.மி.த.க பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பூஜை அறைத் திறப்பு விழாவும், திருமுழுக்கு உற்சவமும் எதிர்வரும் புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேசத் தலைவர் எஸ். திருலோகநாதன்சிறப்பு விருந்தினராகவும், வலி. மேற்குப் பிரதேசசபை உபதலைவர் வே. மகேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-ரீ)

## நாளை

கார்த்திகை 21

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தி பிற்பகல் 3.34வரை.

நட்சத்திரம்: பூசம் பின்னிரவு 5.10 வரை

சுபநேரம்: 12.17- 1.47

ராகுகாலம்: 7.47- 9.17

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒருவன் தன்னுடன் போட்டியிடுவதற்குச் சரியான மனிதர்கள் இருக்கும்போதுதான் தன் திறமையை முழுமையாக வெளிப்படுத்துகிறான்.

## சமுதாயத்தை நல்லதாக மாற்ற பிறருக்கு நன்மை செய்யுங்கள்:

### ஞாயிறு நற்பிரசாதம்

இன்றைய உலகில் பொருள்களிலோ, சொல்லிலோ, செயலிலோ எல்லாவற்றிலும் இருவகையானவையே இருக்கின்றன. இதனால் உண்மையானது எது? போலியானது எது? என்று கண்டுபிடித்து அதனைத் தீர்மானித்தே நம்ப வேண்டியிருக்கின்றது. சில வேளைகளில் உண்மைகள் பொய்களாகவும் பல வேளைகளில் பொய்கள் உண்மைகளாகவு வெளிப்படுகின்றன.

இயேசு நற்செய்தியிலே பின்வருமாறு கூறுகின்றார்,

'எந்த வேலைக்காரனும் இரு தலைவனுக்கு ஊழியம் செய்ய முடியாது; ஏனெனில் ஒருவனை வெறுத்து மற்றவனிடம் அன்பாயிருப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்து கொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான்'' (லூக்.16:13)

இவ்வாறு இரட்டை வேடம் போட்டு வாழவே பலரும் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அநீத கண்காணிப்பாளன் விவேகத்தோடு நடந்து கொண்டதற்காகத் தலைவன் அவனை மெச்சிக் கொண்டான். ஏனெனில் ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தம்போன்றவர்களிடம் மிக்க விவேகம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இவ் வசனங்கள் எமக்கும் பொருந்தும். எம்மில் எத்தனையோ பேர் சிறிய காரியங்களில் கூட நம்பத் தக்கவர்களாகச் செயற்படுகின்றோம், பொதுச் சொத்துக்களை மதிக்கின்றோம், சமூக நன்மைகளை விரும்புபவர்களாக இருக்கின்றோம்.

'' அநீத செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத் தகாதவர்களாக இருந்தால் உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவன் யார்? '' (லூக். 16:11) என்று நற்செய்தி பகர்கின்றது.

### அன்ரனி பீற்றர்

'' நன்றும் தீதும் பிறர்தர வாரா '' என்ற மொழிக்கிணங்க நாம் ஒவ்வொருவரும் நினைத்தால் தீமைகள் நிகழாமலும், அவற்றை நன்மைகளாக மாற்றவும் முடியும். மற்றவர் செய்வார், அடுத்தவர் செயற்படட்டும் என்று வாளா இருந்துவிடாது எமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் சமுதாய நலனைக் கருத்திற் கொண்டு, எம் வருங்கால சந்ததியின் நல்வாழ்வை மனதிற் கொண்டு பயன்படுத்த வேண்டும்.

பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதனையே மற்றவர்களுக்குச் செய்யுங்கள். அப்போது தீமை ஏற்படவும். அநீதி நிலை பெறவும் இடமில்லாமல் போகும். அடுத்தவரை நினைத்தல்ல, உங்களை நினைத்து நன்மை செய்யுங்கள். உங்கள் உள்ளமும், இல்லமும், சமுதாயமும் நல்லதாக மாறும்.

நிலத்தின் தன்மையைக் கால் காட்டுவது போல எம் உள்ளத்தின் தன்மைகளை எம் செயல்களில் காட்ட முயற்சி செய்வோம். முயற்சி திருவினையாக்கும். நம்புவோருக்கே வாழ்வுண்டு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 17 சிற்றூழியர் நியமனம்

தென்மராட்சி, டிசெ. 6

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவிவந்த சிற்றூழியர் பற்றாக்குறை கடந்த முதலாம் திகதி முதல் நீங்கியுள்ளது.

கடந்த ஏப்ரல்மாதம்நடைபெற்றநேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டோரில் பதினேழு பேர் (நான்குஆண்களும் பதின்மூன்றுபெண்களும்) அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு ஆண் தொழிலாளர்கள் தவிர்ந்த ஏனைய 15 பேரும்கடந்த முதலாம்திகதிமுதல்தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக வைத்தியசாலைப் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை—

பளை ஆஸ்பத்திரிக்கும் ஓர் ஆண் தொழிளாளியும் நான்கு பெண் தொழிலாளர்களும் நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

(ஐ-117)

# பாடசாலைச் சொத்துகள் விஷமிகளால் சேதம்

வலி.தென்மேற்கு, டிசெ. 6

நவாலி மகாவித்தியாலயத்தின் உடைமைகள் விஷமிகளால் அடிக்கடி சேதமாக்கப்படுவதாக அதிபர் திருமதி சி. விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மலசலகூடமும் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாடசாலைக் கூரை ஓடுகள், தளபாடங்கள் என்பனவும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

விஷமிகள் சிலரின் இந்நடவடிக்கையால் பாடசாலைக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து கல்வித் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்ய இருப்பதாகவும் அதிபர் தெரிவித்தார்.

(ஐ-185)

# திறப்பு விழா

வடமராட்சி, டிசெ. 6

வலிகாமம் கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

நீர்வேலி கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் உள்ள ஒரு கட்டடத்தில் இக்காரியாலயம் திறந்து வைக்கப்படும்.

(ஐ-137)

# கால்நடைத் தீவனத்துக்கு புல்வளர்க்கக் காணி

யாழ்ப்பாணம், டிசெ. 6

கால்நடைத் தீவனத்துக்கு உதவும் வகையில் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் புல்வளர்ப்பதற்கென காணியொன்று தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது,

யாழ். அரச அதிபரின் பணிப்பின் பேரிலே இக்காணி வழங்கப்பட்டது.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் புல் வளர்ப்புப் பற்றி ஆலோசிக்கப்பட்டதற்கமைவாகவே புல் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-5)

## நுண்கலைப் பீடத்தில்

# சித்திரமும் வடிவமைப்பும் புதியகற்கை நெறியாகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் 'சித்திரமும் வடிவமைப்பும், என்ற புதிய கற்கை நெறி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கலைகளை வளர்க்கக்கூடிய பல கற்கை நெறிகள் உள்ளன. ஆனால் எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான சித்திரத்துறைக்கு ஒரு கற்கை நெறி இல்லை என்று பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இதனைக் கவனத்திற் கொண்டே புதிய கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளிலே நிலவுகின்ற சித்திரப்பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்துகொள்ள இது உதவ முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

# ஆசிரியர்களுக்கு...

(நான்காம் பக்கத் தொடர்)

நேரத்திலே பெருக்கெடுக்கச் செய்து விடுவதால் நவீன கற்பித்தலியலில் அதன் பயன் முக்கியமாகின்றது.

அடுத்து கல்விப் பரவலை முன்னெடுக்கும் தொடர்பு ஊடகங்களில் அண்மைக் காலமாக ''ஈ. மெயில்'' (E-mail) எனப்படும் மின் அஞ்சல் பெரும் பங்காற்றத் தொடங்கியுள்ளது. சர்வதேச தொடர்புக்குரிய தொலைபேசியும், கணனியும் ''மொடெம்'' (Modem) என்னும் கருவியால் இணைக்கப்பட்டு இலத்திரன் அஞ்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

''இன்ரர் நெற்'' (Internet) எனப்படும் வலைத்தொடர்பியம் பல்வேறு வலைப்பின்னல் தொடர்புகளை இணைத்து அகிலத்து அறிவுப் பெருக்கை கணனியின் வாயிலாக வகுப்பறைகளுக்குள்ளே கொண்டு வந்து விடுகின்றது. உலகின் அனைத்துக் கண்டங்களையும் இணைக்கும் மிகவும் பரந்த வலைப்பின்னல் அமைப்பு அகிலம் தழுவிய வலைக்கட்டமைப்பு (Wold Wide Web) — W.W. W எனப்படும். இதன் வழியாக உலகெங்கணுமுள்ள ஆறு கோடிக்கு மேற்பட்ட கணனிகள் செய்மதித் தொடர்புகள் வழியாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் வழியாக கற்றலுக்குரிய தொடர்புகளையும் கற்க வேண்டிய தகவல் உள்ளடக்கத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அகில வலைத் தொடர்பியத்தில் இணைந்து கொள்ளும் நிறுவனங்களுக்கும். தனிநபர்களுக்கும் தனித்தனி முகவரிகள் தரப்படும். வலைத் தொடர்பியத்துக்குத் தரப்படும் தகவல்களும்,புள்ளிவிவரங்களும் உலகப் பொதுச் சொத்து ஆகிவிடுகின்றது. யாவரும் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வகையில் ஆசிரியர்களுக்குப் பல வழிகளில் உதவக் கூடிய புதிய கற்பித்தலியல் அம்சங்கள் நிறைந்த நூலாக அமைகின்றது. அனைத்து ஆசிரியர்களும் வைத்திருக்க வேண்டிய நூல் இதுவாகும். கல்வி முறையில் ஆசிரியர்கள் ஒரு பலவீனமான ஊழியர் என்ற நிலை நீக்கப்படவேண்டும். ஆசிரியர்கள் ஆய்வறிஞர்களாக பரிணமிப்பதற்குரிய வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்ற அவாவுடைய கலாநிதி சபா ஜெயராசா அவர்களது உழைப்பின் ஓர் உன்னதவெளியீடாக இந்நூல் உள்ளது.

— பா. தனபாலன்


# ஏரியல் கல்வி நிலையம்

(49, நல்லூர் சந்தை முன்பாக யாழ்ப்பாணம்)

## கல்வியாண்டு 99

ஆண்டு 6 முதல் 11 வரை புதிய வகுப்புக்கள்
ஆரம்பம் 10 - 12 - 1998

கணிதம்
திரு. சண்

விஞ்ஞானம்
திரு. பாலமுருகன்
திரு. S. கண்ணா

தமிழ்
திரு. S, தங்கராஜா
திரு. A. M, கேதீஸ்வரன்

சமூகக்கல்வி
உங்கள் ஆசிரியர்
திரு. N. பாபு

ஆங்கிலம்
திரு செல்வரட்ணம், திரு. குணம்

வர்த்தகம்
திரு. சுதன்

சமயம்
திரு. அகிலன், திரு. க. கோபி

★ மாதாந்தப் பரீட்சைகள், தவணை மீட்டல்கள் நடைபெறும்.
★ முன்னணி ஆசிரியர்களால் 99 A/L, 2000 A/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
★ 06-12-1998 இல் இருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதியை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

(61134) நிர்வாகி

# வள்ளுவர் அக்கடமி

உரும்பிராய்.

கல்வி ஆண்டு
1999

ஆண்டு 1 முதல் O L வரை

ஆரம்பம்:
07 - 12 - 1998
திங்கள்
மாலை 3-00 மணி

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

- அதிபர்

(61127)

# குமரன் கல்வி நிலையம், நவாலி வடக்கு.

ஆண்டு 3 - 11 வரை
ஆரம்பம்: 09 - 12 - 1998 (பி.ப. 3 மணி)

| | | |
|---|---|---|
| கணிதம்: | S. | பால்தாஸ் |
| | W. | சத்தியசீலன் |
| | R, | இந்திராணி |
| விஞ்ஞானம்: | S. | நந்தீஸ் |
| | K. | சசிகரன் |
| தமிழ்: | K. | தயாசீலன் |
| | J. | கோகலே |
| ஆங்கிலம்: | K, | சோமசுந்தரம் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | S. | சந்திரராஜா |
| | R. | வனிதா |
| வர்த்தகம்: | W. | ஜெயராஜ் |
| சமயம்: | S.S. | ஈஸ்வரி |

- நிர்வாகி


(61125.)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

# நினைவஞ்சலி

31 ஆம் நாள் 6 ஆம் ஆண்டு





திருமதி
**காசிப்பிள்ளை கனகம்மா**
தோற்றம் 07—03—1917 மறைவு 06—11—1998

அமரர்
**கனகரத்தினம் காசிப்பிள்ளை**
தோற்றம் 25—10—1905 மறைவு 25—10—1992

06—11—98 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த திருமதி காசிப்பிள்ளை கனகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04—12—98 காலை வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெற்றன. 06—12—98 இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், இன்னும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 3, சந்தன மாதா கோயில் வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(61131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றோர் தினம் இங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், டிச. 6

சர்வதேச ஊனமுற்றோர் தினம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

டாக்டர் சிவராஜா தலைமையில் நடைபெற்ற ஊனமுற்றோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெவ் பிரதிநிதி பெனிபுறுனி கலந்து கொண்டார்.

ஊனமுற்றோர்களின் கைப்பணிப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் சிறப்பு நிகழ்வாக இடம் பெற்றதுடன் ஊனமுற்றோர் சைக்கிளோட்டப் போட்டியும் நடைபெற்றது.

ஊனமுற்றோருக்கான சைக்கிளோட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் பரமுபத்மநாதன் முதலாம் இடத்தையும், சேவியர் மோகனராஜ் இரண்டாம் இடத்தையும், நாகமணி அசோகநாதன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் கார்த்திகேசு லதா முதலாமிடத்தையும், நடராசா சுதா இரண்டாம் இடத்தையும், வலோரி சகாயராணி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

## அறிவித்தல்

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தின் **04—12—98** ஆம் திகதி பொதுக் கூட்டத் தீர்மானப் பிரகாரம் புதிய பஸ் வண்டிகள் பதிவு மட்டுப்படுத்தப்பட்டு எந்தவொரு புதிய பஸ்வண்டியும் சங்கத்தில் பதிவு மேற்கொள்ளப்பட மாட்டாது.

நிர்வாக சபை
**தென்மராட்சி சிற்றூர்திகள் சங்கம்.**

(சி/5725)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஸ்தாபகர்
**அமரர் பொ. கணபதிப்பிள்ளை**
(சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு)
அவர்களின் பாரியார்

**திருமதி க. மரகதவல்லி**

அவர்கள் இறைபதம் எய்தியமையிட்டு எமதுகல்விச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்**
**கரவெட்டி**

(61142)

## பிற்போடப்பட்டுள்ளது

**06-12-98** இன்று நடைபெறவிருந்த **உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் (1998)** தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மிகவும் வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

செயலாளர்
(சி/5716) **பருத்தித்துறை ஐக்கிய வி. க.**

யாழ்ப்பாணம்
அரசினர் பொது வைத்தியசாலைக்கு
தனிப்பட்ட

## பாதுகாப்பு சேவைக்கான
ஒப்பந்தத்துக்கு
## விண்ணப்பம் கோரல்

யாழ்/ அரசினர் பொது வைத்தியசாலைக்கு **01—01—99** தொடக்கம் **30—12—99** வரையான காலப்பகுதியின் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு அண்மைக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வைத்திருக்கும் நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் **20—12—98** காலை 10. 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் **20—12—98** காலை 10. 00 மணிக்கு திறக்கப்படும். மொத்தம் (பத்து) 10 பாதுகாப்பு அலுவலர்களும் ஒரு மேற்பார்வையாளரும் **12** மணி நேர மாற்றுக் கடமைக்கு நாளாந்தம் அல்லது மாதத்திற்கான கூறு விலை கோரப்படுகின்றது.

கேள்விகளுடன் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை காரியாலய நேரத்தில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் பதிவுத்தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படலாம்.

**வைத்திய கலாநிதி (செல்வி) என். கனகரத்தினம்**
**பணிப்பாளர்.**

(சி/5724)

## பெயர் பலகை

வடமராட்சி, டிசெ. 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் மும்மொழிகளிலும் பெயர்ப் பலகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த டிப்போவுக்கு பெயர்ப்பலகை இல்லாதிருந்தது.

(ஐ-173)

## சமய நிகழ்வுகள்

வடமராட்சி, டிசெ. 6

தெல்லிப்பழை பன்னாலை மயிலையம்பதி ஞானவைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும். (இ-15-8-173)

## ஆசிரியர்கள் தேவை

**O/L வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்**
ஆகிய பாடங்களைக் கற்பிக்க அனுபவம் வாய்ந்த
**ஆசிரியர்கள் தேவை**
முடிவு திகதி:
**10 - 12 - 98**

**விளம்பர இல. 824,**
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(61128)

**பாடசாலைக்குரியது**

ஆசிரியர்களுக்கான
'இடர்கால கொடுப்பனவு'
விண்ணப்பப் படிவம்
பெற்றுக் கொள்ளலாம்.

**BOND**
**யாழ். நகர்**
[61144]

## காணவில்லை



பெயர்- **ஆறுமுகம் இராசம்மா**
வயது — 70
உயரம் — $5\frac{1}{2}$ அடி
பொது நிறமுடையவர்
மஞ்சள் நிறமான வோயில் சேலை அணிந்திருந்தார். கையில் பை ஒன்றையும் கொண்டு சென்றார்.

**01 - 12 - 98** இலிருந்து காணாமற்போன இவரைக் கண்டவர்கள் கீழ் வரும் முகவரிகளில் ஒன்றுக்கு தயவுசெய்து தகவல் தரவும்.

**குணபாலு கடை**
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

**அன்னை ஸ்டோர்ஸ்**
இணுவில்.

(61129)

# பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சி எதிர் வரும் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் காலை 8. 30 மணி முதல். மாலை 4. 30 மணி வரை விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப்பின் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைமாணவர்களின் செயல் முறைப் பாடத்திட்டத்துக்கு அமைவாகவும், விஞ்ஞான, தொழில் நுட்ப ஆர்வலர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இக்கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதில் பௌதிகம், இரசாயனம், விலங்கியல், தாவரவியல், கணனி என்னும் துறைகள் சார்ந்த கண்காட்சிப் பொருள்களும், செயல் முறைகளும் காண்பிக்கப்படவுள்ளன.

மேற்படி விஞ்ஞானக் கண்காட்சி, இரசாயனவியல் பேராசிரியர் அமரர் சி. மகேஸ்வரன் நினைவாக நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# சித்த மருத்துவத்துறைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறைக்கு அடுத்த கல்வியாண்டுக்கு புதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். இதற்காக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1994, 95, 96, 97 ஆம் ஆண்டுகளில் ஏதாவது ஒன்றில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் 180புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் இதற்கு விணணப்பிக்கமுடியும் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஏனைய துறைகளுக்கு விண்ணப்பிப்பதனைப் போன்று சித்த மருத்துவத்துறைக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

சித்த மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கும் ஏனைய துறைகளில் பட்டம் பெற்றவர்களைப் போன்றே சம்பள அளவுத் திட்டங்கள் உள்ளன. அத்துடன் அவர்களுக்கும் மகாபொல கொடுப்பனவுவழங்கப் படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-9]

## சமாசம் தருவிக்கும் பொருள்

# கப்பற் கட்டணத்தில் விலக்களிக்க மறுப்பு!

அரியாலை, டிசெ. 6

கொழும்பில் இருந்து எடுத்துவரும் பொருள்களுக்கு கப்பற் கட்டண விலக்கு அளிக்குமாறு யாழ்.மாவட்ட விவசாய, உற்பத்தி கூட்டுறவு சமாசம் விடுத்த கோரிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நிராகரித்துள்ளார்.

தற்பொழுது சமாசம் பொருள்களைக் கொழும்பில் இருந்து கப்பற் கட்டணம் செலுத்தியே தருவித்து வருகின்றது.

இந்தக் கப்பற் கட்டணத்தை அறவீடு செய்வதில் விலங்களிக்குமாறு கோரி சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அண்மையில்ஜனாதிபதிக்கும், நிதி அமைச்சருக்கும் அனுப்பி வைத்த கடிதத்தில் கேட்டிருந்தார்.

சமாசத் தலைவரின் கடிதத்தை ஜனாதிபதி மேலதிக நடவடிக்கைக்காக இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளருக்கு அனுப்பி வைத்தார்.

கப்பற் கட்டண சேவை வரியை (ஜீ. எஸ் ரி) விலக்களிக்குமாறு கோரி அனுப்பப்பட்ட அக்கடிதம் ஆராயப்பட்டதாகவும்—

இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும்—

இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் சமாசத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

சமாசத் தலைவர் மீண்டும் நிதி அமைச்சருக்கு இவ்விடயம் சம்பந்தமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ஐ-17)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 1977 |  | 1995 |
| — | | — |
| 12 | | 12 |
| — | | — |
| 27 | | 10 |

**செல்வி கமலாசனி புஸ்பரத்தினம் (கிளி)**
[A/L 97, கலைப் பிரிவு மாணவி]
**திதி: 1998 - 12 - 06**

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
- **குடும்பத்தினர்**
(61140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

இயக்க உறுப்பினராவார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்து ஒரு வருடகாலம் அவர் சிறைவாசம் அனுபவித்தவர்.

விடுதலையான பின் புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து இவர் செங்கலடி புளொட் காரியாலயத்தில் தஞ்சம் புகுந்தார்.

புலிகள் இயக்கத்தில் இருப்பவர்கள் இராணுவத்தினாலோ அல்லது பொலீஸாரினாலோ கைது செய்யப்படும்போது சயனைட் அருந்தி மரணமடைய வேண்டும்.

அப்படி அல்லாது கைது செய்யப்பட்டு விடுதலையாவோருக்கு புலிகள் இயக்கம் மரண தண்டனை வழங்குவது வழமை.

இதற்குப் பயந்து சிறையில் இருந்து விடுதலையான பாலா போன்ற சிலருக்கு உயிர் தஞ்சம் அளிப்பதற்காக நாம் இவ்வாறு அடைக்கலம் கொடுத்துள்ளோம். எனவே இவரின்உயிரையும் பாதுகாக்கும் நோக்குடனேயே இவருக்கு நாம் தஞ்சமளித்திருந்தோம்.

இவர் எமது இயக்க உறுப்பினரல்லர். இவருக்கு நாம் எந்தவித வேலைத் திட்டமும் வழங்கியிருக்கவில்லை. இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் இடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன.

இவர் பழிவாங்கும் நோக்குடன் எமது அலுவலகத்திலிருந்த ஆயுதத்தை எவருக்கும் தெரியாமல் இரவில் எடுத்துச் சென்றே இப்படு கொலைகளைப் புரிந்துள்ளார்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்)

கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் சாவகச்சேரிக் கோட்டம் சாவகச்சேரியிலும் இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தீவகம், சாவகச்சேரி ஆகிய ஐந்து கல்வி வலயங்களுக்கும் உத்தியோகந்தர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

காலதாமதமின்றிக் கல்வி வலய கட்டமைப்பை அமுல்படுத்துமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா பணித்துள்ளார். [இ-5)


# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**புதிய கல்வியாண்டு -- 99**

ஆண்டு 4 முதல் 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 06–12–98 (ஞாயிறு) காலை 7 மணி

வழமையான ஆசிரியர் குழு

அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(61087)


# ஐந்தாம் ஆண்டு நினைவுப் பாமாலையில்
# எங்கள் தலைவா! அப்பா!

மண் மகிழ: 13 — 04 — 1927



கண் நெகிழ: 01 — 12 — 1993

## அமரர் சங்கரப்பிள்ளை பீதாம்பரம்

(ஓய்வுபெற்ற உபஅதிபர் - யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

திதி: 06 . 12 . 1998 (ஞாயிற்றுக்கிழமை)

ஆண்டு ஐந்து ஆனதப்பா! ஆனாலும்
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன? — தங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா? — அப்பா
ஆதரிக்க ஆயிரம் உறவிருந் தென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன?
அப்பா! என்றழைக்க தாங்களில்லையே
— என் செய்வோம்.

தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இரு கரங்கள் கூப்பி இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் தங்கள் ஒளியின்றி வாடும்,

அன்பு மனைவி: திருமதி பீ. சிவயோகம்,
பாசமிகு பிள்ளைகள்: செல்வி பீ. மல்லிகாதேவி,
செல்வி பீ. பத்மராணி,
மைத்துனர்: திரு. க. சந்திரசேகரி குடும்பத்தினர்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

''சிவபதி''
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/5719)

# ஒட்டுசுட்டானில் உள்ள 732 பேரை
# வவுனியா கொண்டு வர நடவடிக்கை

வவுனியா, டிசெ. 6

ஒட்டுசுட்டானில் படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டானில் படையினர் கைப்பற்றிய பகுதியில் சுமார் 732 பொது மக்கள் உள்ளனர் எனவும் அங்கு அவர்களை வைத்துப் பராமரிப்பதில் உள்ள சிக்கல்களை தீர்க்கும் முகமாகவும் விசாரணைக்காகவும் அவர்களை வவுனியாவுக்கு அழைத்து வந்து அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-9-164)

## மோதலில் ஊர்காவலர் பலி

மட்டக்களப்பு, டிசெ. 6

அம்பாறை மாவட்டம்—மங்களகமம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஊர்காவல் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஊர்காவல் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

இதேவேளை பொலன்னறுவை மாவட்டம்—மன்னம்பிட்டியவில் நேற்று முன்தினம் பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர் என படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21-7)

## குடாநாட்டில் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 6

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று பெய்தமழை காரணமாக தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

யாழ். நகரப் பகுதியில் நேற்று பிற்பகல் பெய்த மழை காரணமாக பஸ் நிலையப் பகுதியில் பெரும் வெள்ளம் காணப்பட்டது.

பொதுமக்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே பஸ் பயணத்தை மேற்கொண்டனர். (இ-5-139-15)

## ஒட்டுசுட்டானில் மோதல்கள்

கொழும்பு, டிசெ. 6

ஒட்டுசுட்டான் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் ஒன்பது விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் எனவும் நான்கு படையினர் காயமடைந்தனர் எனவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மறிப்புக் காரைக் குளத்தில் படையினர் சினைப்பர் தாக்குதல் நடத்தியதில் ஐந்து விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் எனவும்— விடுதலைப் புலிகள் திருப்பித்தாக்கியதில் இரண்டு படையினர் காயமடைந்தனர் எனவும்—

இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் எனவும்—

தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக தாமதமின்றி மேற்கொள்வதே சிறந்தது என்று அரசாங்கத்தின் அரசியல் தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வரும் புத்திஜீவிகள் மற்றும் கல்விமான்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸினால் ஏற்படுத்தப்பட்டுள்ள உத்தி ஆய்வுக் குழு கடைசியாகக் கூடிய போது அதில் அங்கும் வகித்தோர் பேச்சு வார்த்தைகள் குறித்து வலியுறுத்தி [illegible] கின்றது. (இ)

## ஏயர் லங்கா உணவுச் சேவை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 6

'ஏயர்லங்கா' உணவு சேவை ஊழியர்கள் தமக்கு நான்கு மாத சம்பளமும் 40 ஆயிரம் ரூபாவும் போனஸாக வழங்கப்பட வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் மாலையில் இருந்து தொழிற் சங்கப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தினால் நேற்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பெரும்பாலான விமானப் போக்குவரத்துக்கள் தாமதமடைந்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

போனஸாக நான்கு மாத சம்பளம் வழங்குவதென்ற அதன் ஒப்பந்தக் கடப்பாடுகள் அனுசரிக்கப்படும். எனினும் மேலதிகமாக 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற ஊழியரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என 'ஏயர் லங்கா' முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

அதேவேளை ஊழியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டால் மட்டுமே பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும் என விமான போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (இ-9)

## காணாமற்போனவர் பற்றி தகவல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6

கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் காணாமற்போனதாக தெரிவிக்கப்பட்ட தொண்டமனாற்றைச் சேர்ந்த நபர் யாழ். பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் பிரதிநிதி எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

தொண்டமனாற்றைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (வயது38) என்பவரை கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது சில குற்றச்சாட்டுக்களை அடுத்து மேற்படி நபர் வல்வெட்டித்துறை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-9)

## புலிகளின் குண்டுத் தாக்குதல்கள் குறித்து படைத் தரப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 6

விடுதலைப்புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்தக் கூடிய முறைகள் குறித்து பாதுகாப்புத்துறையினர் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

விடுதலைப் புலிகள் குளிர்பானப் போத்தல்கள், பாண், உணவுப் பொதிகள், புத்தகம், வீடியோ நாடாக்கள், பேனா போன்றவற்றில்குண்டுகளை மறைத்து வைத்து தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் —

விடுதலைப் புலிகளின் இத்தகைய தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள பொதுமக்கள் அனாதரவான இத்தகைய பொருள்களைக் கண்டால் உடனடியாக படையினருக்கு தெரியப்படுத்துமாறும் —

பாதுகாப்புத் துறையினர் கோரி உள்ளனர். (இ-9)

## தேசிய கல்விக் கல்லூரி நேர்முகப்பரீட்சை இன்று முதல் மூன்று நாள்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 6

வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிகளில் அடுத்த கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்றுமுதல் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறும்.

இன்றும் நாளையும் நாளை மறுதினமும் நேர்முகப் பரீட்சை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.

நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு மேற்படி கல்லூரிகளைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தவறாமல் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறும் —

எக்காரணம் கொண்டும் மீண்டும் ஒருமுறை நேர்முகப் பரீட்சை நடத்தப்படமாட்டாது எனவும்—அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-9)

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தனது மாமன் சின்னத்துரை, மாமி கனகம்மா உட்பட ஏழு பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு தனது மனைவியையும், மகனையும் கடத்திக் கொண்டு அவர் தலைமறைவாகியது தெரிந்ததே.

உயிரிழந்த சின்னத்துரை தனது மகளுடன் வாழ இவரை அனுமதிக்காததால் ஆத்திரமடைந்தே இந்தக்கொலைகளை அவர் புரிந்துள்ளார் என்று பொலீஸார் தெரிவித்திருந்தனர். (இ-21)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில் 06-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org